		ரூபாய் ஆயிரத்தில்		
கோரிக்கை	**துறை**	**வருவாய்**	**மூலதனம்**	**கடன்**
44	தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி – பண்பாடு	7	1	...
45	தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை	9	1,69,69	...
46	போக்குவரத்துத் துறை	1,63,86	6,33	80,00,00
47	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	21,35,78	98,61	2,50,00
48	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	18	...	...
49	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,419,42,02	...	...
	பெரு மொத்தம்	**2,504,75,61**	**234,74,18**	**596,49,12**

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள் —தொடர்ச்சி

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2006–2007, முன்மொழிதல் (ஆ.பே.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006–2007 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year, 2006–2007."